8 பாடம்

# மற்றுமொரு புதிய சட்டம்

***ஆலயம், வீடு, காடு, நமக்குப் பழக்கமில்லாத இடங்களில்கூட நாம் ஜெபித்திருக்கக்கூடும். ஒருமுறை தானியேல் மிகவும் பயப்படத்தக்க இடத்திலிருந்து ஜெபித்ததுபற்றிப் பார்ப்போமா?***

தீயவர்களின் சூழ்ச்சியால் தானியேல் சிங்கங்களின் குகைக்குள்ளே போடப்பட்டார். இடைவிடாமல் தேவனை ஆராதிக்கும் தானியேல் அந்தச் சிங்கக் கெபிக்குள்ளே இருந்தும் தேவனிடம் ஜெபித்தார். தானியேலின் ஜெபம் கேட்கப் பட்டது. தேவன் தானியேலை அற்புதமாகப் பாதுகாத்தார்.

தானியேலைச் சிங்கங்களின் கெபியில் போட்டது தரியு ராஜாவுக்கு மிகுந்த வேதனையை அளித்தது.

தானியேலின் மேல் ராஜாவுக்கு மிகவும் பிரியம் இருந்தது. அவசரப்பட்டு, யோசிக்காமல் அந்தத் தீயவர்களின் பேச்சிலே மயங்கித்தான் அப்படியொரு கட்டளையில் கையெழுத்து வைத்துவிட்டார்.

இப்போதோ தானியேல், சிங்கக்கெபிக்குள் போடப்பட்டுவிட்டதால் ராஜா செய்வதறியாமல் தவித்தார். அன்று இரவு ராஜா சாப்பிடவும் இல்லை; கீத வாத்தியங்கள், இசை எதையும் கேட்கவுமில்லை. தூங்கவுமில்லை. மிகவும் வேதனையோடு எப்போது விடியும் என ஆவலுடன் காத்திருந்தார். இரவு முழுவதும் அவர் தூங்கவே இல்லை.

எப்போது விடியும் என்று தவித்துக்கொண்டிருந்தார். எனவே, காலையில் இலேசாகச் சூரியன் உதிக்க ஆரம்பித்தவுடனேயே தரியு ராஜா கெபியின் அருகே ஆர்வமாய் ஓடி வந்தார். துயரச் சத்தமாய் ‘தானியேலே’ என்று தரியுராஜா கூப்பிட்டார்.

“தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடை



## மனன வசனம்

**அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்.**
**தானியேல் 6:26.**

விடாமல் ஆராதிக்கிற தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராய் இருந்தாரா?'' என்று கேட்டார்.

தானியேல் முதலில் தரியு ராஜாவை வாழ்த்தினார். பின்னர், ''தேவன் என் ஜெபத்தைக் கேட்டார்; தமது தூதனை அனுப்பினார். தூதன்மூலம் சிங்கங்களின் வாய்களைக் கட்டிப்போட்டார். எனக்கு எவ்விதச் சேதமும் இல்லை'' என்றார்.

தரியு ராஜாவின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தானியேலைச் சிங்கங்களின் கெபியிலிருந்து வெளியே கொண்டுவர ஏற்பாடு செய்தார். சேதமின்றி வெளியே வந்தார் தானியேல்.

தானியேலைக் கொல்ல முயற்சித்த அந்தத் தீயவர்களை தரியு ராஜா சிங்கக் கெபிக்குள்ளே போடச் செய்தார்.

அந்தத் தீயவர்களின் தூண்டுதலினால், 'தரியு ராஜாவாகிய தன்னைத் தவிர, வேறு எவரையும் வணங்கக்கூடாது' என்று கட்டளை போட்டிருந்தார். ஆனால், இப்போது தானியேலின் தேவனின் மகத்துவத்தைக் கண்டு மனம் நெகிழ்ந்தார். இப்போது புதிதான கட்டளை ஒன்றை வெளியிட்டார்.

'நாட்டில் மக்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டும். தானியேலின் ஜீவன், ''ஜீவனுள்ள தேவன்'' அவருடைய ராஜ்யம் அழியாதது.

சிங்கங்களின் வாய்களுக்கு தானியேலைத் தப்புவித்த தேவன் அவரே. இரட்சிக்கிறவரும் அவரே. வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிற தேவன் அவரே' என தேவனைப் புகழ்ந்தார்.



## செய்தி

**தேவனைத் துதிக்கும்போது தேவனின் அன்பையும் வல்லமையையும் பிறர் பார்க்கிறார்கள்.**

'இவை யாவையும் தமது கட்டளையாகக் கொண்டு நாட்டு மக்கள் கருத்தாய்க் கீழ்ப்படியவேண்டும்' என்றும் எழுதினார்.

இதுவே தரியு ராஜாவின் மற்றுமொரு புதிய கட்டளை யாக இருந்தது. கோரேஸ் ராஜாவின் ராஜ்யபார காலம் வரையிலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது. தானியேல் மிகவும் மதிப்புக் குரியவராக இருந்தார். தேவனுக்குப் பயந்து வாழ்ந்ததால் சிறந்திருந்தார்.

என் பிரியமே! தானியேலை வழிநடத்திய தேவன் உன்னையும் நடத்துவார். தானியேலைப் போல நீயும் தேவனை உன் செயலின்மூலம் மக்களுக்கு வெளிப்படுத்துவாயா?

**செய்முறை:** இக்கட்டான வேளையிலும் தேவனைத் துதிப்பதை தானியேல் விட வில்லை. எவருக்கும் எதற்கும் பயப்படாமல் தேவனைத் துதித்தார். கீழ்க்காணும் கேள்வி களுக்கான பதிலைக் கோடுகளில் எழுது.

1. தீயவர்கள் பார்வையிலும் பயப்படாமல் ஜெபித்தவர் யார்?

    ______________________________

2. முப்பது நாட்கள் தன்னை மட்டுமே வணங்கவேண்டும் என்று கட்டளையிட்ட மன்னன் யார்?

    ______________________________

3. எவர்களுக்கு தானியேல் பயப்படவில்லை?

    ______________________________

புதிர் 8